# வட - கிழக்கு இணைப்பு முடியாது

## வெளிநாட்டு தூதரக அதிகாரிகள் மத்தியில் லலித் பேச்சு!

தமிழர் விடுதலைக் கூட்டணியால் முன்வைக்கப்பட்டுள்ள வடக்கு கிழக்கு யோசனையை அரசாங்கத்தால் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது என்று தேசிய பந்தோபஸ்து அமைச்சர் லலித் அத்துலத்முதலி தெரிவித்துள்ளார். கொழும்பில் நேற்று ராஜதந்திரிகள், தூதரக அதிகாரிகள் மத்தியில் அமைச்சர் உரையாற்றுகையில், வடக்கு-கிழக்கு இணைப்பு தவிர்ந்த வேறு எந்த யோசனையைப் பற்றிப் பேசுவதற்கும் அரசு தயாராகவுள்ளது என்றார். எதிர்க்கட்சிகள் கூட வடக்கு-கிழக்கு இணைப்பை எதிர்த்து வருகின்றன எனவும் அமைச்சர் கூறினர். இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதில் அரசாங்கம் நம்பிக்கை வைத்துச் செயற்படுகின்ற போதிலும் ஈழம் தேசிய விடுதலை முன்னணி, ஈழம் தவிர்ந்த வேறு எந்த பிரேரணையையும் முன்வைக்கவில்லை. இவர்கள் இராணுவ ரீதியாகவே இதனைத் தீர்க்க முயல்கிறார்கள். தமிழர் விடுதலைக் கூட்டணியோ ஏனைய தமிழ் அமைப்புக்களோ கிழக்கு மாகாண மக்களைப் பிரதி

...6ம் பக்கம் பார்க்க

Registered as a Newspaper in Sri Lanka விலை ரூபா ஒன்று

# ஈழமுரசு

முரசு 2 24-12-85 செவ்வாய் (மார்கழி 9 ரபியு ஆகிர் 11) முழக்கம் 319

★ தமிழர்களை அடியோடு ஒழிப்பதே அரசின் திட்டம்!

# தமிழ்பகுதியிலிருந்து ராணுவம் வெளியேற்றப்பட வேண்டும்!

## உங்கள் செல்வாக்கை பயன்படுத்தி உதவுக என்று கூட்டணி சிவா ராஜீவிடம் வேண்டுதல்

(சென்னை)

"தமிழ்ப் பகுதிகளில் ராணுவம் இருக்கும் வரை தமிழர் கொலைகள் தொடர்ந்துகொண்டேயிருக்கும். எனவே தமிழர் பகுதிகளிலுள்ள ராணுவத்தினர் முற்றாக வெளியேற்றப்பட வேண்டும். இலங்கை அரசிடம் தங்களுக்குள்ள செல்வாக்கைப் பயன்படுத்தி இதனைச் செய்யுங்கள்" என்று தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் மு. சிவசிதம்பரம் பாரதப் பிரதமருக்கு அனுப்பியுள்ள அவசர தந்தியொன்றில் கேட்டுள்ளார்:

இலங்கை இனப் பிரச்சினையைத் தீர்த்து வைக்க உடனடியாகப் பயனுள்ள நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் திரு. சிவசிதம்பரம் தமது தந்தியில் கேட்டுள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமையும், சனிக்கிழமையும் தமிழர் வசிக்கும் யாழ்ப்பாணப் பகுதிக் கிராமங்களில் நடத்தப்பட்ட விமானத் தாக்குதலினால் பலத்த உயிர்ச் சேதம் ஏற்பட்டுள்ளதாக அஞ்சப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

பெரும் தொகையான தமிழர்களை இலங்கை இராணுவம்

—6ஆம் பக்கம் பார்க்க

## யாழ்தேவி இன்று முதல்

யாழ்ப்பாணத்திற்கும் மருதானைக்கும் இடையேயான

... 6ம் பக்கம் பார்க்க

## கிழக்கில் 500 பேர் கைது; 5 இளைஞர்கள் சூட்டுக்கு பலி!

கிழக்கு மாகாணத்திலுள்ள ஊறணி, மைலம்பாவெளி ஆகிய பகுதிகளை படையினர் சுற்றிவளைத்துத் தேடுதல் நடத்தியதில் 310 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களில் 18 பேர் தமிழீழ விடுதலைப் புலிகள், ஈ. பீ.ஆர். எல். எஃப், ரெலோ, ஈரோஸ் இயக்கங்களைச் சேர்ந்தவர்களென அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் அரசாங்கம் அறிவித்துள்ளது.

அக்கரைப்பற்றில் நேற்று முன்தினம் சுமார் இருநூறு பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இங்கு நடந்த சம்பவமொன்றில் ஐந்து தமிழ் இளைஞர்கள் படையினரின் தாக்குதலால் மரணமானதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

எவருக்கும் காயமில்லை! கட்டடத்துக்கு சேதம்!!

## டாக்டர் பாலசிங்கம் வீட்டில் மர்மமாக குண்டு வெடித்தது!

(சென்னை)

சென்னையில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கப் பேச்சாளரான டாக்டர் ஏ. எஸ். பாலசிங்கத்தின் இல்லத்தில் நேற்றுக் காலை வெடிகுண்டு ஒன்று வெடித்ததாயினும் அவரும் அவரது மனைவியும் காயம் எதுவுமின்றித் தப்பினர்.

சென்னை நகரப் பொலிஸ் கமிஷனர் திரு. டபிள்யூ. ஐ. தேவாரம் இத்தகவலை வெளியிட்டுள்ளார்.

சென்னை பெஸன்ட் நகரில் உள்ள அவரது இல்லத்தின் படுக்கையறை மீது இவ்வெடிகுண்டு வீசப்பட்டது என்றும் ஆனால் டாக்டர் பாலசிங்கம் வேறொரு அறையில் இருந்ததால் அவர் அதில் சிக்கவில்லை என்றும் கட்டடம் மட்டுமே சேதமானதாகவும் திரு, தேவாரம் மேலும் தெரிவித்தார்.

பாலசிங்கம் குற்றச்சாட்டு

## என்னைப் படுகொலை செய்ய இலங்கை அரசே முயற்சித்தது

(சென்னை)

தன்னைப் படுகொலை செய்வதற்கு இலங்கை அரசாங்கமே முயற்சித்ததாக டாக்டர் பாலசிங்கம் குற்றம் சாட்டியுள்ளார்.

சென்னையிலுள்ள முக்கிய தமிழ்த் தலைவர்களைக் கொலை செய்வதற்கு இலங்கை அரசு திட்டம் தீட்டியுள்ளதாகவும், இது பற்றித் தமக்கு முன்னரே தெரியுமென்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதுபற்றித் தமிழ்நாடு பொலிஸாருக்குத் தாம் அண்மையில் முறையிட்டிருந்ததாகவும் டாக்டர் பாலசிங்

...6ஆம் பக்கம் பார்க்க

முன்னணி அறிவிப்பு:

## தமிழர்மீது ராணுவம் இறுதி தாக்குதல் நடத்த திட்டம்

(சென்னை)

சமீபத்தில் தமிழர் பகுதிகளில் படையினர் நடத்திய தாக்குதல் குறித்து ஈழம் தேசிய விடுதலை முன்னணி கவலை தெரிவித்துள்ளது.

தமிழர் மீது இறுதி இராணுவத் தாக்குதல் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளதாக அது குற்றஞ்சாட்டியுள்ளது. மத்திய அரசிடம் இதுபற்றி எடுத்துரைக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

வெளியுறவுச் செயலர் திரு. ரமேஷ் பண்டாரியைச் சந்திக்க இம் முன்னணி சில தினங்களுக்கு முன் புதுடில்லி சென்றுள்ளது.

சென்னை மீண்டதும் இரா

...6ஆம் பக்கம் பார்க்க

## அடகு வைத்தோர் மறியல் போராட்டம் வெள்ளிக்கிழமை முதல் மீண்டும் ஆரம்பம்

அடகு வைத்தோர் சங்கம் எதிர்வரும் 27ம் திகதி வெள்ளிக்கிழமை முதல் வடபகுதியிலுள்ள சகல மக்கள் வங்கிக் கிளைகளின் முன்பாகவும் மீண்டும் காலவரையறையற்ற மறியல் போராட்டத்தை ஆரம்பிக்கவுள்ளதாக அறிவித்துள்ளது.

வங்கி நிர்வாகத்துடன் தற்போதுள்ள விநியோக முறையின் எண்ணிக்கையை அதிகரிக்கும்படி கேட்டு சங்கம் மேற்கொண்ட சகல நடவடிக்கைகளும் பயனளிக்காது போனதாலேயே இம்முடிவு எடுக்கப்பட்டது. இதற்குக் குறைந்த பட்சக் கோரிக்கையாக தற்போதுள்ள எண்ணிக்கை முறையை அதிகரிக்கும்படி கேட்பதெனவும் சங்கம் தீர்மானித்துள்ளது.

காலை 7.30 மணிமுதல் பத்து மணிவரை நடைபெறும் இப்போராட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அடகுவைத்த சகலரும் கேட்கப்பட்டுள்ள

...6ஆம் பக்கம் பார்க்க

## படையினரால் பதற்றம்

(காரைநகர்)

காரைநகர் கடற்படை முகாமிலிருந்து படையினர் நேற்றுப்

—6-ஆம் பக்கம் பார்க்க

## வவுனியாவில் நேற்றுக்காலை கொள்ளை முயற்சி தோல்வி

(வவுனியா)

நேற்றுக்காலை ஒன்பது மணியளவில் வவுனியாவை அடுத்துள்ள கோவில்குளம் சமநலச் சேவை நிலையத்திலிருந்து பணத்தை வங்கியிலிட எடுத்துச் செல்ல ஆயத்தமான சமயம் இனம் தெரியாத இளைஞர் எண்மர் காசைப் பறிக்க எடுத்துக்கொண்ட முயற்சி தோல்வியில் முடிந்துள்ளது.

—6-ஆம் பக்கம் பார்க்க

விற்பனையிலும் வாசகர் தொகையிலும் முன்னணியில் ஈழமுரசு

அறிவித்தல் / விளம்பரம்

## தவறிவிட்டது!

ஜே. விஜயதாஸ், இல 03, பென்ரிக்கோஸ் லேன், கண்டி வீதி (அரியாலை மேற்கு) யாழ்ப்பாணம் என்று முகவரியுள்ள எனது தேசிய அடையாள அட்டை பருத்தித்துறை வீதியில் வல்லை வெளிக்கும் கல்வியங்காட்டுக்கும் இடையில் தவறிவிட்டது. ஆகவே கிடைக்கப்பெற்றவர்கள் ஈழமுரசு காரியாலயத்தில் ஒப்படைக்கும்படி தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றேன். R/15213

## திட்டப்பரிசுத் தெரிவு

நாளை பிற்பகல் 5 மணியளவில் நடைபெறவிருக்கும் மாதாந்த அதிர்ஷ்டசாலியை அங்கத்துவ நண்பர்களே வந்து தெரிவு செய்யும் வண்ணம் அழைக்கின்றோம். எவ்வித முதலீடுகளுமின்றி தினசரி வருமானம், அதிர்ஷ்டம், ருதுவானாலும், திருமணமானாலும், பிரசவமானாலும், விபத்தானாலும், மரணமானாலும் - ஏராளமான நன்கொடைகளும், கடன்வசதிகளும் ஒருங்கே அமைந்த திட்டமிது. விபரங்களுக்கு நேரில் வரவும் அல்லது முத்திரைக் கவருடன் விண்ணப்பிக்கவும். லக்கி பெனிபிட்கோ லிமிட்டட், பொதுச்சந்தை, கோப்பாய். R/15212

## நத்தார் புத்தாண்டு ஆராதனை

(நல்லூர்)

சுன்னாகம் கிறிஸ்தவ சேவ ஆச்சிரமத்தின் நத்தார்-புத்தாண்டு ஆராதனை வழிபாட்டு நிகழ்ச்சி நிரல் வருமாறு:- டிசம்பர் 23 ம் திகதி கிராமத்தின் வீடுகளை நத்தார் பாடகர் குழு சந்தித்தன.

25 ந் திகதி காலை ஐந்தரை மணிக்கு நத்தார் ஆராதனையும் திருவிருந்தும். காலை 9 மணிக்கு காங்கேசன்துறை மருத்துவமனையில் நத்தார் ஆராதனை. பிற்பகல் மூன்றரை மணி கைதடி முதியோர் இல்லத்தில் நத்தார் ஆராதனை.

26 ந் திகதி பிற்பகல் மூன்றரை மணி நத்தார் பஜனை. 28ந் திகதி பிற்பகல் மூன்றரை மணி சிறுவர் நாள். 30 ந் திகதி காலை 7 மணிக்கு சின்னண்ணன் நினைவு நாள் திருவிருந்து ஆராதனை. 31ந் திகதி காலை 7 மணி முதல் பகல் 12 மணி வரை அமைதிநாள். ஜனவரி 1 ந் திகதி காலை ஐந்தரை மணி புத்தாண்டு ஆராதனையும், திருவிருந்தும். காலை 9 மணி காங்கேசன் துறை மருத்துவமனையில் புத்தாண்டு ஆராதனை.

இந்த ஆராதனைகளுக்குரிய எல்லா ஏற்பாடுகளையும், ஆச்சிரமபிரதம சேவக் அருட்திரு. சாம் அல்பிரட் அடிகளார் செய்துள்ளர்.

## தபாலகங்கள் ஏற்க மறுப்பு

(காரைநகர்)

வடபகுதியிலுள்ள தபால் அலுவலகங்களில் தினமும் பொது மக்களிடமிருந்து பெறப்படும் வியாபாரப் பணமே நாளாந்தக் கொடுப்பனவுகளுக்குப் பயன்படுத்தப்படுவதால் கிழிந்த, உருக்குலைந்த தாள் நாணயங்களை ஏற்க முடியாத நிலையில் வடபகுதியில் உள்ள தபால் அலுவலகங்கள், உப-தபால் அலுவலகங்கள் உள்ளன.

மேற்படி விடயம் சம்பந்தமான சுற்றுநிருபம் ஒன்றை வடமாகாண தபால் அத்தியட்சகர் சகல தபால் அலுவலகங்களுக்கும் அனுப்பி வைத்துள்ளார்.

## டிச. 27 ல் ஒளிவிழா

(நல்லூர்)

யாழ். கலவித்திணைக்கள நலன்புரிக்கழகம் வழங்கும் "ஒளிவிழா" நல்லூர் ஸ்தான சீ. சீ. த. கலவன் பாடசாலை மண்டபத்தில் இம்மாதம் 27ந் திகதி வெள்ளிக்கிழமை பகல் நிர்வாக உத்தியோகஸ்த்தர் திரு.கே. சந்திரராசா தலைமையில் நடைபெறவிருக்கிறது.

வடபிராந்தியக்கல்விப்பணிப்பாளர் திரு. எம். சிமியாம் பிள்ளை கௌரவ விருந்தினராகக் கலந்து கொள்ளும இவ் விழாவில் சகோதரர் ஏ ஜெபநாயகம் குழுவினர் இசையும் இறைச்செய்தியும் வழங்குவார்கள்.

யாழ்ப்பாண ஆர்ச்டீக்கன் அருட்திரு. சாம். டி. ஹோர்சிங்டன் அடிகளார் ஆரம்ப ஜெபத்தை நடத்துவார். அருட்திரு. யே. பி. ஈ. செல்வராசா அடிகளார் இறுதி ஆசீர்வாத ஜெபத்தை ஏறெடுப்பார்.

இவ்விழாவில் நல்லூர் பரியாக்கோபு ஆலய வாலிபர் சங்கத்தினர், சுண்டிக்குளி பரியோவான் ஆலய வாலிபர் சங்கத்தினர், கிறிஸ்துவிற்கான வாலிபர் சங்கத்தினர், புனித யூதாததேயு பாடகர் குழுவினர், இயேசு பேசுகிறுர் வாலிபர் சங்கக் குழுவினர் ஆகியோர் கலந்து கொண்டு காதுக்கினிய பாடல்கள், நகைச்சுவை விருந்து, நடனம், நாடகம், ஆகியவற்றை வழங்குவார்கள். இந்தவிழா சம்பந்தமான ஏற்பாடுகளை கலாச்சாரக்குழுச் செயலாளர் திரு. எஸ். துரைசிங்கம் மேற்கொண்டுள்ளார்.

## நிர்வாகிகள்

(யாழ்ப்பாணம்)

புதுக்குடியிருப்பு - இரணைப்பாலை கிராம அபிவிருத்திச் சங்க புதியவருடத்திற்கான நிர்வாகிகள் தெரிவு அண்மையில் நடைபெற்றது.

தலைவர்: திரு. ஜி. ஸ்ரனி யோசப், உபதலைவர்கள்: திருவாளர்கள். ஜி. துரைரெட்ணம், எஸ். கலிஸ்ரஸ் மகேந்திரா, செயலாளர்: செல்வன் ஆர். அந்தோனிப்பிள்ளை, உப செயலாளர்: செல்வன் பீ. புனிதநாயகம், பொருளாளர்: செல்வன் எம். ஆர் கே. ரட்ணராஜா, கணக்காய்வாளர். திரு. ரீ. அடைக்கலதாஸ், போஷகர்: வண பிதா. நேசராஜா, நிர்வாகசபை உறுப்பினர்களாக எழுவர் தெரிவாகினர்.

## பயிற்சி

(கொடிகாமம்)

யாழ். மறைக்கல்வி நடுநிலையத்தினரால் வழங்கப்படும் மறை ஆசிரியர் மூன்றுமாதப் பயிற்சி நெறிக்கு புதிதாக பயிற்சியாளர்கள் சேர்த்துக் கொள்ளப்படவிருக்கின்றனர்.

கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்த இருபாலாரும் விண்ணப்பிக்கலாமென அறிவிக்கப்பட்டுள்ளது.



## பிறந்தநாள் வாழ்த்து

※ காரைநகர், கந்தசாமி கோமளம் தம்பதியின் மகள் மோகனராணி இன்று தனது இரண்டாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறுர்.

※ மட்டுவில், கிருஷ்ணசாமி சாந்தநாயகி தம்பதியின் மகள் விமலரஞ்சினி இன்று தனது எட்டாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறுர்.

※ ஆவரங்கால், ஆனந்தகிருஷ்ணர் சுந்தரேஸ்வரி தம்பதியின் மகன் தணிகைக்குமரன் இன்று தனது இரண்டாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறுர்.

※ வேலணை மேற்கு, கதிரன் கிளி தம்பதியின் மகள் ஜெயவதனு இன்று தனது எட்டாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறுர்.

※ யாழ். அபூபக்கர் வீதி, மன்சூர் சித்திஜனுபா தம்பதியின் மகள் பைரூசா இன்று தனது முதலாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறுர்.

※ நல்லூர், பத்மநாதன் புஷ்பராணி தம்பதியின் மகன் ஷியந்தன் இன்று தனது மூன்ருவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறுர்.

## பஸ்சேவை இல்லாததால் கஷ்டம்

கிளிநொச்சி பூநகரி பஸ் சேவைகள் இல்லாததனுல் இப் பகுதிக்கான தபால் சேவைகள் சீர்குலைந்துள்ளது. இது சம்பந்தமாக செட்டியகுளம் கிராமசேவையாளர் பிரிவு இணக்க சபை கிளிநொச்சி சாலை அத்தியட்சகர், கிளிநொச்சி அரசாங்க அதிபர், போக்குவரத்துச்சபை வட பிராந்தியத் தலைவர் ஆகியோருக்கும் கடிதம் அனுப்பியுள்ளது.

இதனுல் இப்பகுதியிலுள்ள அரசாங்க அரச நிறுவனங்களும் மற்றும் ஸ்தாபனங்களும் செயலிழந்து விட்டதாகவும் இக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கற்கோவள இணக்க சபை

(புலோலி)

பருத்தித்துறை கற்கோவளக் கிராம மக்களிடையே ஏற்படும் சிறு சச்சரவுகள், பிணக்குகளைத் தீர்த்து கிராமத்தில் சமாதானத்தை நிலவச் செய்யும் நோக்கமாக இணக்கசபை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

கற்கோவளம் கிராம சேவை அலுவலர் திரு. கே. சிவசண்முகத்தின் முயற்சியினுல் அமைக்கப்பட்டுள்ள இநத இணக்க சபை உறுப்பினர்கள் பற்றிய விபரங்கள் தலைவர்: திரு. முத்துக்குமாரு தணிகாசலம், உபதலைவர்: திரு வ. துரைசிங்கம், செயலாளர்; திரு. எஸ். தேவதாசன், உப-செயலாளர்: திரு. இ. ஹரிதாஸ், பொருளாளர் திரு. வ. இராமலிங்கம் செயற்குழு உறுப்பினர்கள் ஐவர் தெரிவாகினர்.

## மாணவர்க்கு போட்டிகள்

(ஊரைதீவு)

ஊரைதீவு தமிழ் மாதர் கழகம் புங்குடுதீவு இளந்தமிழர் மன்றத்தினரின் அனுசரணையுடன் மாணவர்களுக்கிடையே திருக்குறள் மனனப் போட்டி பேச்சுப் போட்டி என்பவற்றை நடத்தவுள்ளது.

புங்குடுதீவு ஏழாம் வட்டாரத்திலுள்ள மாணவர்களுக்கிடையேயான இப்போட்டிகளில் வெற்றி பெறுவோருக்கு பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. இப்போட்டிகளுக்குரிய ஏற்பாடுகளை திருமதி. சந்திரா கோபால் செய்து வருகிறுர்.

## 7 பேர் தெரிவு

(ஒட்டுசுட்டான்)

முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்து கூட்டுறவுப் பரிசோதகர்களுக்கான நேர்முகப் பரீட்சைக்கு அண்மையில் கொழும்புக்குச்சென்ற 49 பேரில் கீழ் வரும் ஏழு பேர் தெரிவு செய்யப்பட்டு இம் மாதம் 16 ம் திகதி தொடக்கம் முல்லைத்தீவு மாவட்டத்திலேயே கடமையும் ஏற்றுள்ளனர்.

மங்களேஸ்வரி நடேசு முள்ளியவளை, சிவகங்காதேவி சரவணமுத்து குமாரபுரம், கலாதேவி சுப்பிரமணியம் குமுழமுனை, அப்பையா சிங்கநாயகம் முள்ளியவளை, தெ. செந்தமிழ்ச்செல்வி முள்ளியவளை, கே. பவளராணி துணுக்காய், எம். பங்கதேவி கரவெட்டி ஆகியோரே இவர்கள்.

## பஸ்சேவை தலைவரிடம் நேரில் முறையீடு

(பூநகரி)

கிளிநொச்சி பூநகரி இ.போ.ச. பஸ் சேவை குறித்து பூநகரி பிரஜைகள் குழுத்தலைவர் திரு. பொ. தங்கராசா வடபிராந்திய போக்குவரத்துக் சபைத் தலைவரிடம் நேரில் எடுத்துரைத்து நிவாரணம் கோரினுர்.

தான் உரிய நடவடிக்கை மேற்கொள்வதாக தலைவர் உறுதியளித்துள்ளார்.

## ஏழைகளுக்கு இலவச மருத்துவ சிகிச்சை

(புலோலி)

பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரம இலவச மருத்துவ சேவையினுல் இதுவரை 513 ஏழை நோயாளிகள் மருத்துவ சேவைகளைப் பெற்றுள்ளார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் ஆச்சிரமத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை டாக்டர் எம். கே. முருகானந்தனின் இலவச மருத்துவ சேவைகள் வழங்கப்பட்டன. எதிர்வரும் 22-ம் திகதி டாக்டர் எம். கே. லலித்குமாரின் இலவச வைத்திய சேவைகளும், 29-ம் திகதி டாக்டர் ஏ. பாலகிருஷ்ணனின் இலவச வைத்திய சேவைகளும் இடம்பெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.


**மத்திய கிழக்கில்**

றைவர், எலக்ரிசன், மெக்கானிக், மேசன், காப்பென்ரர், பிளம்பர், லேபர், ஸ்ரோக்கீப்பர், சுப்போவசியர், கிளாக், ரெலெக்ஸ் ஒப்பரேட்டர், ரெலிபோன் ஒப்பரேட்டர், சவல் ஒப்பரேட்டர், (பணிப்பெண்கள், அரசமாளிகை) ஆகிய வேலை தேடிச் செல்வோர் தொடர்பு கொள்ளவும்.

**அலங்கார் ஏஜன்சீஸ்**

5, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

பாஸ்போட் Bond ஆகியவை செய்து கொடுக்கப்படும். பி. 960

**வெளிநாட்டு பயண ஒழுங்குகள்**

அபுதாபி, கட்டார், சவுதி ஆகிய நாடுகளுக்கு தாதிமார், கனரகவாகன சாரதி, லேபரஸ், மேசன், தச்சர் ஆகியோர் தேவை. முற்பணமோ, கட்டுப்பணமோ செலுத்த வேண்டியதில்லை. விபரங்களுக்கு:- நேரில் வரவும். பாஸ்போட் இல்லாதவர்களும் வரலாம்.

மேலதிக விபரங்கள்:-

**K. சிவநேசன்** இல. 01, கணேசபுரம், கிளிநொச்சி.

**S. நித்தியானந்தன்** இல. 132, சிவநகர், உருத்திரபுரம். பி. 961

**A/L 86 Aug.**

**கலை, வர்த்தக வகுப்புகளுக்கான**

**துரித மீட்டல் வகுப்புகள்**

திட்டமிடப்பட்ட முறையில் பயிற்சி
NOTES தரப்படமாட்டா
முற்ருக அச்சடிக்கப்பட்ட இலவச பாடக் குறிப்புகள்-
5 வருட வினக்களுக்கு-விடை (Paper Class)

யாழ். நகரின் பிரபல ஆசிரியர்கள்:-

| | | |
|---|---|---|
| பொருளியல் | :- | திரு. கிருஷ்ணனந்தன் |
| கணக்கியல் | :- | திரு. வன்னியசிங்கம் |
| வர்த்தகம் | :- | திரு. தேவா, திரு. ரட்ணம் |
| அளவையியல் | :- | திரு. யுகபாலசிங்கம் |
| தமிழ் | :- | திரு. நாகேஸ்வரன் |
| இந்து நாகரிகம் | :- | திரு. வேதா |
| | | மற்றும் பலர் |

**ஆரம்பம்: 1-1-86 (காலை 10 மணி)**

விபரங்களுக்கு:- நேரில் / தபாலில்

**ASTAN INSTITUTE**

66/I. Hospital Road, P/920 Jaffna.

**ST. JOHN'S COLLEGE, JAFFNA**

Wanted a teacher to do English Christianity and Social study in the middle school.
Apply before the 30th of December 1985

பி. 962 Principal

# கலை, வர்த்தக பட்டதாரி ஆசிரியர்களின் விபரம்

புதிதாக நியமனம் பெற்றுள்ள கலை, வர்த்தக பட்டதாரி ஆசிரியர்களின் பெயர் விபரம் கடந்த சனி, திங்கட் கிழமைகளில் வெளியானது. மிகுதிப் பெயர்கள் விபரம் வருமாறு: எஞ்சிய பெயர்கள் நாளை வெளிவரும்.

செல்வி. எஸ். பிரபாகரி- வட்டுக்கோட்டை, செ வி. எஸ். செல்வராஜா கரவெட்டி, செல்வி. எஸ். குமாரசாமி- நல்லூர். செல்வி. பீ. குமாரசாமி தெல்லிப்பளை, செல்வி. ஏ. சதாசிவம் தெல்லிப்பளை, செல்வி. வை. இராஜேந்திரம். தெல்லிப்பளை, செல்வி. கே. மகாலக்சுமி யாழ்ப்பாணம், திரு. கே. வரதராஜமூர்த்தி தாளையடி, செல்வி. என். விவேகானந்த பருத்தித்துறை, செல்வி. நளினி சபாரத்தினம் கரவெட்டி, செல்வி. சீ. பொன்னையா வட்டுக்கோட்டை, செல்வி. ஈ. பசுபதி பருத்தித்துறை, சகோதரி ஏ. சேவியர் யாழ்ப்பாணம், செல்வி. எஸ். சகுந்தலாதேவி சங்கத்தானை, செல்வி. எஸ். சுப்பிரமணியம் பரந்தன், திரு. எம். இக்னேஸியஸ் யாழ்ப்பணம், திரு. வீ. கருணாமூர்த்தி புலோலி. திருமதி. ஜீ. கோணேஸ்வரி தெல்லிப்பளை, செல்வி. பீ தாமோதரம் துறைநீலாவணை, செல்வி எஸ். செல்வராஜா மட்டக்களப்பு, செல்வி. ஆர். தங்கராஜா மட்டக்களப்பு, திரு கந்சாமி செங்கலடி, செல்வி எம். பூபாலபிள்ளை மட்டக்களப்பு, செல்வி. எஸ். விஸ்வலிங்கம் -மட்டக்களப்பு திரு. எஸ். கணேசன் -முறக்கொட்டாஞ்சேனை செல்வி. எம் யோகேஸ்வரி- முறக்கொட்டாஞ்சேனை, செல்வி. கே. எஸ். செல்லையா செங்கல்லடி, திருமதி வீ.ஆர். ஞானப்பிரகாசம் காத்தான்குடி, திரு. ரீ. கோபாலகிருஷ்ணன் குருக்கள்மடம், செல்வி. பீ. கணபதிப்பிள்ளை குருக்கள் மடம், செல்வி. எஸ். கணபதிப்பிள்ளை, குருக்கள்மட , திரு சீ நடராஜா குருக்கள்மடம், திரு. பீ. பேரின்பராஜா குருக்கள்மடம், செல்வி. ஆர். சுகந்தி மட்டக்களப்பு, செல்வி எஸ் சிறிரஞ்சினி கொழும்பு, செல்வி. கே. கோவிந்தன் குருக்கள்மடம், செல்வி எஸ். ஜெயராணி யூவனு காத்தான்குடி, திருமதி. ஜீ. குழந்தைவடிவேல் களுவாஞ்சிக்குடி, செல்வி எஸ். இந்திராணி துறைநீலாவணை, செல்வி. எஸ். சித்திராங்சன்னி களுவாஞ்சிக்குடி, திரு. ஏ. நசிறுதீன் சம்மாந்துறை, திரு. .ம். ரி. இக்பால் அக்கரைப்பற்று, திரு ஐ எல். எம். அபூபக்கர் காரைதீவு, செல்வி பீ. லெக்சுமி அககரைப்பற்று செல்வி. ஆர். எம். எஸ். ஜோசப் மானல், திருமதி. கே. எஸ். கமறுனிஸ்ஸா சம்மாந்துறை, திரு. ஏ. எல். எம். ஜௌபர் சம்மாந்துறை, திரு, வீ. தியாகராசா காரைதீவு, திரு. எம். ஜே. ரீ. இக்பால் அக்கரைப்பற்று, திரு. ஐ. எல். எம். அபூபக்கர் காரைதீவு, செல்வி. டீ. லட்சுமி அக்கரைப்பற்று, செல்வி. கே. தர்மலிங்கம் உருத்திரபுரம், செல்வி. ஜே நடராஜா பரந்தன், திரு ரீ. சடாச்சர சர்மா புதுககுடியிருப்பு திரு. ஜே. கிறிஸ்தோப்பர் ஒட்டுசுட்டான், செல்வி. எஸ். குலேஸ் ரி துணுக்காய், செல்வி. என். விஜயகுமாரி புதுக்குடியிருப்பு, செல்வி. எம். எச் சம்சுநோனு யட்டிவில்ல. செல்வி. எ எம் ஞானவதி திருக்கேதீஸ்வரம், செல்வி. ஏ. எம். யோசெப்பின் உயிலங்குளம் செல்வி என். செ ஸ்தியம்ம நானுட்டான். செல்வி. எஸ். மார்க்கண்டு புளியங்குளம், செல்வி. ஜே. எவ். ஜீ. அன்ரனிப்பிள்ளை வவுனியா, செல்வி. பீ. எஸ். அமிர்தரத்தினம் ஓமந்தை, திருமதி. எஸ். பிரபாகரன் வவுனியா, செல்வி. என். வசந்தகுமாரி, திருகோணமலை, திருமதி எஸ். நாகராணி சீனன்குடா, செல்வி. வீ. இராஜரத்தினம் மூதூர், செல்வி. எம். சுப்பிரமணியம் திருகோணமலை, செல்வி. ஆர். சித்திரவேலாயுதம் திருகோணமலை, திரு. எஸ். யோகரத்தினம் நிலாவெளி, திரு. எம். எம். நாகீப் மூதூர், செல்வி. ரீ. நாலணி மூதூர், திரு. ஏ. எம். சாலிகு கிண்ணியா, திரு பி. எகியா கிண்ணியா, திரு. ஏ. எம். ஆனிப் லெப்பை கிண்ணியா.

செல்வி. என். எஸ். எம். சுபையிர்கலாகெண்டிவெல, செல்வி. என். எஸ். எம். மொஹிதில் கொழும்பு, செல்வி. சீ. கந்தையா கொழும்பு, எஸ். எச். எம். நௌபல் பொரல்ல, ஆர், மல்மார்க்கீசன் கொழும்பு செல்வி. எப். எஸ், எப். சாலிரு கண்டி. செல்வி. எம். எஸ். சித்தி சாஹிரா தெல்தெனியா, செல்வி கே எம்- பாத்துமாப்பி கண்டி, எம். எப். எம் சாகீம் கம்பொளை, எச். எம் எம். கலீல் வாகக்கோட்டை, செல்வி. எம். எச் எம். சகிடியா மாவனல்லை, திருமதி எம். கே. எவ். சதீக்கா காலி, செல்வி. கே. ஆர். கைறூன்வீவீ காலி- எல, செல்வி. எஸ். மரிக்கார் ஹேமதுகம, செல்வி. பீ. சிவபாதசுந்தரம் யாழ்ப்பாணம், எஸ். சுப்ரமணீஸ்வரன் புதுக்குடியிருப்பு, எம். விஜயரத்தினம் செம்மலை, செல்வி ஆர். கந்தசாமி தம்பலகாமம்,

செல்வி. ஐ. இந்திராணி கரவெட்டி, செல்வி எஸ். சீத்தாதேவி தெல்லிப்பளை, ரீ. பாலகிருஷ்ணன் யாழ்ப்பாணம், பீ. சதாசிவம் பூவரசங்குளம், என் செல்வரத்தினம் முல்லைத்தீவு, ஏ. அமிர்தலிங்கம் முல்லைத்தீவு, பி. செல்லத்துரை யாழ்ப்பணம், செல்வி. எஸ். எஸ் பரமசிவம் சுன்ணுகம். செல்வி. எம். மஹேரஞ்சிதராணி கொக்கட்டிச்சோலை, எம். எஸ். எம். பாரூக் குருணுகலை, திருமதி. ரி. விக்கிரமராச்சி தங்காலை, செல்வி. என். நாகமுத்து தம்பினுவில், எம் எச். பதுர்தீன் காலி, ஏ. சௌந்தரலிங்கம் யாழ்ப்பாண , செல்வி. ஏ ஆழ்வாப்பிள்ளை புலோலி, திருமதி. ஏ. இந்திரகுமார் திருகோணமலை, செல்வி. ரீ. சித்திரவேறு திருகோணமலை, எம். சி எம். லாபீர் மாத்தளை, கே. குலசேகரம் பூநகரி, செல்வி. பீ பரமேஸ்வரநாதன் சுன்ணுகம், திருமதி ஏ. சிவனேசராசா வந்தாறுமூலை, யூ. எல். எம். நிசாகிர் பொல்காவல, திருமதி. என். செல்வராசா பூநகரி, ரீ. ராசலிங்கம் மட்டுவில், செல்வி. கே. தெவேந்திர பருத்தித்துறை, செல்வி. எம். இராசேஸ்வரி கொழும்பு, கே. கே. பாலச்சந்திர கொழும்பு, திருமதி ரீ நவரஞ்சனு பருத்தித்துறை, கே வி. ராஜதுரை வரணி, எஸ். கமலநாதன் ஊர்காவற்றுறை கே புஸ்பநாதன் கரவெட்டி, ரீ நவரத்தினம் கரவெட்டி ஏ ஈஸ்வரநாதன் உரும்பராய். திருமதி என் ஆர். கிறிஸ்ரில்டா யாழ்ப்பாணம், ஏ. சதானந்தன் கோண்டாவில், செல்வி கே. பாக்கியமலர் கொடிகாமம், சீ. சிவகுமாரன் சுழிபுரம், திருமதி எஸ் ஜெகநாதன் மானிப்பாய்,

(தொடரும்)

## தொழிற்சங்க சம்மேளனப் பிரதிநிதி பேச்சு:

# இந்திய அரசின் நெருக்கடியினுல்தான் பேச்சுக்கள் ஆரம்பமானது

"இன்று உலக நாடுகள் பலவற்றில் தமிழ் மக்கள் பிரச்சனையின் உண்மை நிலைமைகள் தெரியவந்துள்ளது. இதன் காரணத்தால் யு. என். பி. அரசு தனக்கு ஏற்பட்டுள்ள அவமானங்களை மறைப்பதற்காகவும் தனது ஆயுதசக்தியை பலப்படுத்துவதற்காகவமே திம்பு பேச்சு வாத்தையை ஆரம்பித்தது. இப்பேச்சுவார்த்தையில் எதுவித உரிமையும் தமிழ் மக்களுக்குக் கிடைக்காது என்பதைத் தெரிந்திருந்தும் இந்தியாவின் நிர்ப்பந்தம் காரணமாகவே தமிழ்தீவிரவாத இயக்கங்கள் இப்பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டன."

இவ்வாறு பருத்தித்துறை, புலோலி வயிரவர் கோவிலடியில் நடைபெற்ற கருத்தரங்கில் பங்குபற்றி "தமிழ் மக்கள் போராட்டமும் இந்திய நிலைப்பாடு" என்னும் தலைப்பில் உரையாற்றிய இலங்கைத் தொழிற்சங்க சம்மேளனப் பிரதிநிதி எம். ஏ. சி. இக்பால் தெரிவித்தார். கருத்தரங்கிற்கு திரு. ந. தீசன் தலைமை வகித்தார். தொடர்ந்துபேசிய எம். ஏ. சி. இக்பால் "இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி இலங்கைத் தமிழ் மக்கள்மேல் அன்புவைத்து இவ்விடயத்தில் பங்காற்ற முயற்சிக்கவில்லை. அவர் தென்னிந்திய தமிழ் மக்களைச் சாந்தப்படுத்தவும் இலங்கை அரசை தனது கட்டுப்பாட்டுக்குக் கொண்டு வரவும் இலங்கையில் தமது நாட்டு முதலாளிகளின் வியாபாரத்தை விரிவாக்கவுமே இப்பிரச்சினையில் தலையிட்டு வந்துள்ளார். எனவேதான் திம்பு பேச்சுவார்த்தையில் தீவிரவாத இயக்கங்களைக் கலந்து கொள்ளச் செய்து தமிழர்களுக்கு பயனற்ற ஒரு சமரசத்தை ஏற்படுத்த முயற்சி செய்தார்" என்ருர்.

# வடமராட்சியில் கால்நடை செய்முறைக் கண்காட்சி

(புலோலி)

வடமராட்சி கால்நடை வளர்ப்போர் சங்கம் நடாத்தும் செய்முறையில் காட்டப்படும் கண்காட்சி இம் மாதம் 26ஆம் திகதி புலோலி மெதடிஸ்மிஷன் பாடசாலை (மந்திகை) யில் நடைபெறவுள்ளது.

இக் கண்காட்சியில் வைக்கோல் பதன்படுத்தி சிறந்த உணவாக கால் நடைகளுக்கு ஊட்டல். புல், பூண்டு, குழை ஆகியனவற்றை நல்ல முறையில் பாதுகாத்து வைத்து கால் நடைகளுக்கு உணவாக ஊட்டல், கால்நடை செறிவுத்தீன் தயாரித்தல், பசுப்பாலிலிருந்து யோகற், ஐஸ்கிறீம் தயாரித்தல், குடிசைத் தொழில் மூலமாகப் பெறப்படும் பற்பொடி, கற்பூரம், சாம்பிராணி, பப்படம், வடகம் தயாரித்தல், பனைவளப் பொருட்கள், பன்னவேலைப் பொருட்கள் தயாரித்தல் என்பன செய் முறையில் காட்டப்படும்.

இக் கண்காட்சியில், சிவதர்மவள்ளல் க. கனகராஜா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வதுடன் இலவச மரக் கன்றுகளையும் விநியோகிப்பாரென்று வடமராட்சி கால் நடை வளர்ப்போர் சங்க இணைச் செயலாளர்களான டாக்டர் எம். தங்கராசா, அதிபர் கே. வீணுகோபால் ஆகியோர் அறிவித்துள்ளனர்.

## காரைநகர் மணிவாசக சபை

# சைவசமய பாடப் பரீட்சை பொற்கிழிபெறும் மாணவர்

(காரைநகர்)

காரைநகர் மணிவாசகர் சபைர்கல் நடாத்தப்பட்ட சைவசமய பாடப்பரீட்சையில் திறமை சித்தி பெற்ற மாணவர்களுக்கான பரிசில் வழங்கும் வைபவம் எதிர்வரும் 25ம் திகதி புதன்கிழமை நடைபெறும் மணிவாசகர் விழாவில் இரண்டாம் நாள் நிகழ்ச்சிகளின் போது நிகழும்.

ஈழத்துச் சிதம்பர தேவஸ்தான வசந்த மண்டபத்தில், ஓய்வு பெற்ற வட்டாரக் கல்வியதிகாரி திரு ச. சபாபதி தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் யாழ். கல்வித் திணைக்கள அதிகாரி பிரதம அதிதியாகக்கலந்து கொண்டு பரிசில்களைவழங்குவார்.

ஒவ்வொரு வகுப்பிலும் அதிவிசேட திறமைச் சித்தி பெற்று "பொற் கிழி" பரிசாகப் பெறவுள்ள மாணவர்களின் விபரம் பின்வருமாறு.

ஆண்டு- 3 செல்வன்-பு. இரவீந்திரன் வலந்தலை வடக்கு அ. மி. த. க. பாடசாலை, ஆண்டு- 4 செல்வன்- சி. சிறீதரன், ஆயிலி சிவஞேதய வித்தியாசாலை, செல்வன், ச. ராஜீவ் யாழ் நசரக் கல்லூரி கனிஷ்ட பிரிவு ஆண்டு, 5 செல்வன். அ. அரிதரன் ஆயிலி சிவஞேயா வித்தியாசாலை, செல்வி. வி. நிலேஷ்வா வலந்தலை வடக்கு அ. மி. த க. பாடசாலை, ஆண்டு. 6 செல்வன், அ. மீனுட்சிசுந்தரம், சுந்தரமூர்த்தி நாயனுர் வித்தியாசாலை, ஆண்டு 8 செல்வி சி. சிவமணி, யழ் நகர்க் கல்லூரி, ஆண்டு 10. செல்வி ந. புஷ்பராணி, சுந்தரமூர்த்தி நாயனுர் வித்தியாசாலை, ஆண்டு 11: செல்வன் க. கணேஸ்வரராச , யாழ்நகர் கலாசாலை

# திருமுறை ஊர்வலமும் கூட்டமும்

(காரைநகர்)

காரைநகர் மணிவாசக சபையின் 31வது ஆண்டு மணிவாசகர் விழா இம்மாதம் 24 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஈழத்துச் சிதம்பர தேவஸ்தான வசந்த மண்டபத்தில் நடைபெறும். சடையாளி வைரவர் கோவிலிலிருந்து திருவாசகத் திருமுறை ஊர்வலம் ஆரம்பமாகும். நல்லை ஞானசம்பந்த ஆதீன முதல்வர் குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் மணிவாசகர் விழாவை ஆரம்பித்து வைப்பார்கள். யாழ்ப்பாணப் பல்கலைக் கழக இந்து நாகரிகத்துறை விரிவுரையாளர் கலாநிதி ப. கோபாலகிருஷ்ணன் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் அருள்மொழியரசி திருமதி வசந்தா வைத்தியநாதன் "திருவெம்பாவை" என்னும் பொருள் பற்றி உரையாற்றுவார்

சைவமணி, சித்தாந்தச் செம்மல், வித்துவான் மு. சபாரத்தினம் எழுதிய "ஆண்டிகேணி ஐயனுர்" என்ற நூலும் இவ்விழாவில் வெளியிடப்படும். யாழ். கல்வித் திணைக்கள நிர்வாக அதிகாரி திரு கா. சந்திரராசா நூல் ஆய்வுரை நிகழ்த்துவார்

# வரலாறு நூலாகிறது

(காரைநகர்)

ஈழத்துச் சிதம்பரத்தில் எழுந்தருளியிருக்கும் ஐயனுர் நூலுருப் பெறுகிருர். "ஆண்டிகேணி ஐயனுர்" என்ற பெயரில் சைவமணி, சித்தாந்தச் செம்மல், வித்துவான் மு. சபாரத்தினம் ஈழத்துச் சிதம்பரத்தில் உள்ள ஐயனுரின் வரலாற்றினையும், இலங்கையில் உள்ள ஏனைய ஐயனுர் ஆலயங்களின் வரலாறுகளையும் தொகுத்து வெளியிடவுள்ளார்.

# வவுனியாவில் மா கிடையாது

(வவுனியா)

வவுனியாவில் கோதுமை மாவிற்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இங்குள்ள கடைகளில் மட்டுமன்றி கூட்டுறவுச் சங்கத்தில் கூட ஒரு பிடி மாவுதானும் பெற முடியவில்லையென்று புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# முல்லைத்தீவில் இரண்டு சம்பவம்

காத்தான்குடி தபாலக கொள்ளைச் சம்பவத்தில் மரணமான இளைஞரின் சடலம் மட்டக்களப்பு ஆஸ்பத்திரியிலிருந்து கடத்திச் செல்லப்பட்டதாகவும், கொள்ளையர்கள் பயன் படுத்திய மோட்டார் சைக்கிள் ஊர் மக்களால் தீமூட்டி எரிக்கப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளன.

# ரயில் வண்டியா? ரயில்வண்டிலா?

(அரியாலை)

யாழ். புகையிரத நிலையத்தில் மேடைக்கு போவதற்காக வழங்கப்படும் ரிக்கற்றில் மேடைக்கு போக மட்டும், வண்டிலில் ஏற உத்தரவில்லை" என்று தமிழில் அச்சிடப்பட்டுள்ளது. இதை வாசிக்கும் தமிழன்பர்கள் "மாட்டு வண்டிலா" எனத் தமாஷ் விடுகிருர்கள் ஆகவே வண்டியா? வண்டிலா? சரியான பதமாக இருக்கும். இந்த ரிக்கற்றுக்களை நீங்களும் ஒரு முறை வாசிக்கலாம் தானே!

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

சவூதிஅரேபிய பயண ஒழுங்குகள்
STENO TYPIST வயது: 25 to 50
உடனடித் தொடர்பு:
அலங்கார் ஏஜன்சீஸ்
5, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். B959

உதய சிந்தனை

ஆயுதங்கள் இவ்வான்மாவைச் சிதைக்க மாட்டா, தீ இதை எரிக்காது; தண்ணீர் இதை நனைக்காது; காற்றும் உலர்த்தாது
-பகவத் கீதை

37, கண்டி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி 23336

இதய ஒலி

24-12-85 செவ்வாய்க்கிழமை ( குரோதன ) மார்கழி-09

# பரிசோதனைக் களத்தில் பதம் பார்க்கிறார்கள்

தமிழ்ப் பகுதிகளில் அரச பாதுகாப்புப் படைகள் ஆரம்பித்திருக்கும் புதிய முறைத் தாக்குதல் பற்றி நேற்றும் குறிப்பிட்டிருந்தோம்.

திருமலை, வன்னிப் பிரதேசங்களிலிருந்து பாதுகாப்பான பகுதியென்ற நம்பிக்கையுடன் சுமார் முப்பதாயிரம் தமிழ் அகதிகள் யாழ்ப்பாண மாவட்டத்தில் குடியேறியுள்ளனர் என்பது முன்னரே தெரிந்த விடயம்

இந்தப் பாதுகாப்பான பிரதேசத்தில் கடந்த சில நாட்களாக தொடங்கப்பட்டிருக்கும் ராணுவத் தாக்குதலால் இங்கு வாழும் மக்கள் நிலைகுலைந்து, அச்சத்துடனும் பீதியுடனும் வாழ்க்கை நடத்தி வருகின்றனர்.

தமது சொந்த மண்ணை விட்டே ஓடிவிட வேண்டுமென்ற மனோ நிலையில் இங்குள்ள மக்கள் வாழுகின்றனர்.

இந்த உண்மையை யாழ். பிரஜைகள் குழுச் செயலாளர் திரு. ஆர். பாலசுப்பிரமணியம், ஜனாதிபதி ஜெயவர்த்தனாவுக்கு எழுதியுள்ள அவசர கடிதமொன்றில் விபரமாகக் குறிப்பிட்டுள்ளார்.

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் திரு. எம். சிவசிதம்பரம் சென்னையிலிருந்து பிரதமர் ராஜீவ் காந்திக்கு அனுப்பியுள்ள தந்தியொன்றில் தமிழ்ப் பகுதிகள் அழிக்கப்பட்டு வருவதை விளக்கமாக எடுத்துக் கூறியுள்ளார்.

டில்லி சென்றிருக்கும் ஈழம் தேசிய விடுதலை முன்னணித் தலைவர்கள் தமிழ்ப் பகுதிகளில் நடைபெற்று வரும் படையினரின் மூர்க்கத்தனமான தாக்குதல்களை எடுத்துக் கூறியுள்ளதுடன், இறுதியான பாரிய அளவிலான ''தமிழர் ஒழிப்பு'' நடவடிக்கையாக இதனைத் தாங்கள் கருதுவதாக போதிய ஆதாரங்களுடன் வெளியுறவுச் செயலர் ரமேஷ் பண்டாரிக்குத் தெரிவித்துள்ளனர்.

மொத்தத்தில் பார்க்கும்போது, எந்தவிதமான அசம்பாவிதங்களுமின்றி, அமைதியாகவிருந்த யாழ்ப்பாணக் குடாநாட்டில் வேண்டுமென்றே அரச பயங்கரவாதம் கட்டவிழ்த்துவிடப் படுவதன் நோக்கம் என்னவென்பதை எவராலும் கற்பனை பண்ணிக்கூடப் பார்க்க முடியவில்லை.

இவ்வாறான தாக்குதல்களால் பெரும் தொகையான தமிழர்கள் சிறுவர், வயோதிபர் என்ற வயது வேறுபாடின்றி வெளிநாடுகளுக்குச் செல்கின்றனர். மேலும் பலர் செல்ல முனைகின்றனர் என்று யாழ். பிரஜைகள் குழு தனது கடிதத்தில் சொல்லியுள்ளது.

ராணுவ அட்டூழியங்கள் தாங்க முடியாது யாழ்ப்பாணத்திலிருந்து பெரும் தொகையானவர்கள் அகதிகளாகத் தமிழ் நாட்டுக்கு வர முயற்சிக்கலாமென்று திரு. சிவசிதம்பரம் தமது தந்தியில் தெரிவித்துள்ளார்.

மற்றைய தமிழர் பிரதேசங்களில் இடம்பெற்ற சம்பவங்களுடன் சேர்த்து, யாழ்ப்பாணத் தாக்குதல்களைக் கவனிக்கையில் இவர்கள் தெரிவிப்பது நூற்றுக்கு நூறு உண்மையாகவே தென்படுகிறது.

மன்னாரில் தமிழர்கள் இன்று நூற்றுக் கணக்கில்தான் வசிக்கிறார்கள். மிகுதிப் பேர் தமிழகத்தில் அகதிகள்.

வவுனியாத் தமிழர்களில் பெரும்பான்மையானவர்களும் அங்கிருந்து வெளியேற்றப்பட்டுவிட்டனர் இங்கு அடுத்தடுத்து நடத்தப்பட்ட தாக்குதல்களே இதற்குக் காரணம்.

திருமலை நிலைபற்றிச் சொல்லத் தேவையில்லை. திட்டமிட்டு அரச படைகள் எடுத்த நடவடிக்கையின் பயனாக அங்கு தமிழ் மணமே இல்லாமல் செய்யப்பட்டுவிட்டது. அங்கு வசிக்கும் சில நூற்றுக்கணக்கான தமிழர்களும் அகதி முகாம்களின் விருந்தாளிகளாகவும், என்றாவது நடக்கவிருக்கும் நிகழ்ச்சிகளின் பலிக் கடாக்களாகவும் வசித்து வருகின்றனர்.

யாழ்ப்பாணக் குடாநாட்டின் முகப்பு வாசலான கிளிநொச்சியில், படைபலம் எந்த நிலையையும் தாக்குப் பிடிக்கக்கூடிய வாறு தயார்படுத்தப்பட்டுள்ளது.

ஆனையிறவு, கிளிநொச்சிப் பகுதிகளில் '' அதிநவீன வசதிகள்'' நன்றாக ஏற்படுத்தப்பட்டுள்ளன.

வெளிமாவட்டங்கள் பதம் பார்க்கப்பட்ட பின்னர், குடாநாட்டில் பரிசோதனையை ஆரம்பித்திருப்பதும்கூட இங்கிருந்து தமிழர்களை வெளியேற்றவே என்பதை, கடந்த காலச் சம்பவங்கள் நன்கு புரிய வைக்கின்றன

யாழ்ப்பாணத்திலிருந்தே தமிழர்கள் வெளியேறுவார்கள் என்றால், அது அவர்களுக்குக் கிடைத்த பெருவெற்றியாகி விடும்.

இன்றைய சூழ்நிலையில் இங்கு வாழும் ஒவ்வொரு தமிழரும் இதனை மனதில் கொள்ளுதல் அவசியத்திலும் அவசியமாகும்.

---

இலங்கை, இந்திய அரசுகளுக்கும் தமிழர் சிந்தனைகளுக்குமிடையே மூவழிப் பாலமாகத் திகழ்ந்தவர் சிறப்புத் தூதுவர் ஜி. பார்த்தசாரதி. இவர் கடைசியாகக் கொழும்பு வந்து சென்ற பின்னர் பல சம்பவங்கள் நடைபெற்றுள்ளன.

# பார்த்தசாரதி 'வெளியே' மொஸாட் படை 'உள்ளே'; வேவுச் சேவை ஆரம்பம்

பாரத அரசின் தென்திசை நோக்கில், உள்ளவை உள்ளபடி பார்வையிற் படுவதற்கு அவற்றின் வருகை வரவேற்புக்கு உரியதுமாகும். முதலாவது ('சதேர்ண் எயர் கொமான்ட்') தென்புற விமான ஏவலணி ஒன்றை நிறுவியமைத்தமை ஆகும்; அதன் உணவு, உபகரண ஆகரவுத் தளம் திருவனந்தபுரத்திலுள்ளது. இரண்டாவதாக, செயற்பாட்டு வகையில் வெளியுறவுக் கொள்கைக்குழுத் தலைவராக திரு. ஜி. பார்த்தசாரதியை (ஜி. பி. யை) நியமித்தமையாகும். தமிழ்நாட்டின் பெருமகனாக அவர் விளங்குவது ஒருபுறமிருக்க, கடந்த ஓராண்டு காலமாக, இரு அரசுகளுக்கும் தமிழர் சிந்தனைக்கும் இடையே ஒரு மூவழிப் பாலமாக இயங்கிய அவர், இப்பதவியின் பயனாக, முன்னரிலும் பார்க்கக் கூடிய திட சித்தத்துடன் கொழும்பு அரசாங்கத்தைக் கையாளவல்ல நிலையில் இருப்பார். இலங்கைப் பிரச்சினையைக் கையாளுதற்கு அபரிமித வாய்ப்புள்ள நிலை அவருக்கு உண்டு.

ஜி. பி கடைசியாகக் கொழும்புக்குத் தூது சென்ற பின் எவ்வளவோ நிகழ்வுகள் சம்பவித்துள்ளமை உண்மைதான். தமிழர்களின் அதோகதிகுறித்து இந்தியா தொடர்ந்தும் ஆழ்ந்த கவலையும் ஈடுபாடும் கொண்டு வரும் அதே சமயம், தனது சொந்தப் பாதுகாப்பு அக்கறைகளுக்கு விளையும் குந்தகம் குறித்து அதே யளவு கிலேசமும் ஈடுபாடும் கொண்டிருப்பதற்கு முன்னரிலும் பார்க்க அதிக காரணம் எழுந்துள்ளது. இதுகாறும் இலங்கையின் உள்ளூர் அலுவல் எனக் கோரப்பட்டு வந்த இத்தீவின் நடவடிக்கை களத்தினுள் இஸ்ரேல் புகுந்துள்ளமையையே நாம் இங்கு குறிப்பிடுகிறோம்.

ஒரு சிறு எடுத்துக்காட்டு இதற்குப் போதுமானது. துருவ சமுத்திரங்கள்மீது பிரமாண்டமான பனிக்கட்டிப் பாறைகள் சாதாரணமாக மிதந்திருக்கக் காணலாம். பாறையின் ஐந்தில் ஒரு பாகம் சிறு நுனி மாத்திரமே நீர்ப்பரப்பின்மேல் கண்ணுக்குப் புலப்படும். எஞ்சிய பெரும்பாகமும் நீரின் கீழ் அமிழ்ந்தியிருந்து இந்நுனிமீது மோத நேரும் கப்பலகளுக்குப் பேரனர்த்தம் விளைவிக்கும். இப்பனிப் பாறை நுனியை ஒத்ததே இஸ்ரேலிய வருகையும் என ஏற்கனவே இனங்கண்டு கொள்ளப்பட்டுள்ளது இந்நிலைமைபற்றிய கணிப்பு இதன் காரணமாக முழு மாற்றம் அடைந்துள்ளது தமிழர் விடுதலைப் புலிகளுடன் போரிடத் துணையாகவே இஸ்ரேலின் உதவியைக் கொழும்பு அரசாங்கம் சேர்த்துக் கொண்டது என்ற மிக எளிதான விளக்கம், கண்ட மாத்திரத்திலேயே ஏற்றுக்கொள்ளப்படுதற்கு அப்பாற்பட்டது. அதன் நெளிவு சுழிவுகள் அம்மேற் தோற்றத்தைவிட ஆழ்ந்து செல்வதோடு அமையாது, பாரதத்துடன் சகல சம்பந்தங்களும் உடையனவாக உள்ளன.

தென்திசையினின்றும் முதன்முதலாக, புதிய ஒரு மிரட்டலை இந்தியா எதிர்நோக்குகிறது: தெற்கிலிருந்து சுற்றிவளைத்தலின் ஆரம்பம. ஒரு கட்டணத்தைப் பெற்றுக் கொள்ளும் ஜெயவர்த்தனா, படுக்கையும் ஊணும் தரிப்பிடமும் ஏற்பாடு செய்தளிக்க கோடரி மனிதனாக வருபவர் இஸ்ரேல். பின்வரும் தகவல்கள் அதிகாரபூர்வமான ஆவணங்களினின்றும் பெறப்பட்டவை. இந்தியா போலும் பேரரசிற்குக் கூடச் சம்பவிக்கக் கூடிய மிரட்டல் எப்படிப் பட்டது என்பதைச் சித்தரித்துக் காட்டும் அனைத்துலகப் பின்னனிப் பிணித்தல்களை அவை விளக்குகின்றன

பீரங்கிகளைவிட, போர்விமானங்களையோ உயர்வேகக்கலங்களையோ விட, இராணுவப் பலம் பெற இஸ்ரேல் நம்பிக்கை வைத்திருப்பது, பகைவரின் நடவடிக்கைகளை பற்றிச் சரியான முழுமையாக, அறிந்திருப்பதன் மீதே ஆகும். புவியியல் ரீதியாக வடக்கு. தெற்கு கிழக்கு முதலாம் திக்குகளில் சிரியா, எகிப்து, ஈராக் ஜோர்டான், லெபனான் ஆதியாம் பகைத் தேசங்களால் சூழப்பட்டிருக்கும் இஸ்ரேல், அவற்றினின்றும் தீங்கிற்குஎளிதில் ஆளாகும் நிலையில் அமைந்து உள்ளமையால், இத்தரவுகளைப் பெற்றுப் பேணி வருவது அதற்கு அவசியமானதே. இஸ்ரேலுடன் உக்கிர விரோத நோக்ப்பான்மை பூண்ட லிபியாவையும், தெற்கு யெமெனையும் அவற்றுடன் சேர்த்துக் கொண்டால், இஸ்ரேலினுடையதுபோல ஐம்பது மடங்கு நிலப்பரப்புப், இருபது மடங்கு சனத்தொகையும் அதன் பகைவர்களிடம் உண்டு. இஸ்ரேல் பிறந்த உடனேயே, உலகில் இருப்பதற்கே அந்நாட்டிற்கு உரிமை இல்லை என எதிர்ப்புக் குரல் எழுப்பியவை இந்நாடுகள். இன்று அவைகளின் இஸ்ரேலுடனான உறவுகள் ஓரளவு சீர் திருத்தியுள்ளனவாயினும், இஸ்ரேல் தொடர்ந்தும் ஒரு நாடாக இருத்தற்கு அவை ஓர் இடையறு மிரட்டலாகவே தோற்றிவருகின்றன.

வலுமிக்க, திறன் வாய்ந்த ஒரு வேவுபார்த்தற் சேவையைப் பேணிவருவதன் அவசியத்தை, இஸ்ரேல் அரசின் தாபகர்கள் அதன் ஆரம்ப முதற் கொண்டே கணித்து மனதில் ஏற்றுக் கொண்டிருந்தனர். இஸ்ரேல் மிகச் சிறிய ஒரு நாடு ஆதலால், அச்சேவையின் மனித வளமும் நிதி வளமும் சிறிய அளவிலேயே அமைய வேண்டியன ஆயின. இப்படியெல்லாம் இருந்தாலுங் கூட, உலகிலேயே மிகச் சிறந்த வேவு பார்க்கும் தாபனத்திற்கு ஈடானதாக அது இருக்க வேண்டியதாகும். ஏனெனில், இஸ்ரேல் நாடு தொடர்ந்து நிலைத்திருப்பது அதன் மீது தான் தங்கியிருக்கும்.

அண்மையில், இலங்கை அரசாங்கத்தினிடமும் இத்தகைய ஓர் எண்ணம் புகுத்தப்பட்டுள்ளது போலத் தெரிகிறது. இஸ்ரேல் எதிர்நோக்கும் அதே போன்ற அபாயம் இத்தீவையும் எதிர்நோக்குகிறது என்பது தான் அவ்வெண்ணம். தீவுக்கு வடதிசையில் தமிழ் நாட்டைக் கொண்ட ஒரு பகைமையான ஒரு நிலப் பிரதேசம். இந்திய அரசாங்கத்தின் கொள்கைகள இப்படித்தான் இருக்க வேண்டும் எனமேலிடத்திலிருந்து நிருணயிக்க வல்லது போன்ற ஒரு தமிழ் நாட்டுப் பிரதேசம். உள்ளூர், ஆதி முதற்கொண்டே சிங்கள உள்மனத்தில், நிகழக்கூடிய இந்தியப் படையெடுப்பு பற்றிய அச்சம் என்றும் உள்ளது ஆகையால், அப் பயத்தைப் பயன்படுத்தி அவ்வெண்ணத்தை விதைத்து விடுவது சுலபமாயிற்று.

இலங்கையின் தேசிய பந்தோபஸ்து அமைச்சர், அத்துலத்முதலி, இஸ்ரேலியர் போரில் தோற்கடிக்கப்பட முடியாதவர்கள் என்ற அபிப்பிராயத்தை அபாரமாகக் கனம் பண்ணும் ஒருவராவர். தமிழ் நாட்டிற்குள்ளேயே தாக்குதலை இட்டுச் செல்லும் ஆற்றல் அவர்களிடமுண்டு என அவர் வெளிப்படையாக எண்ணுகிறார்.

இஸ்ரேலின் இரகசிய வேவு பார்த்தற் சேவையாகிய 'மொஸாட்' எனும் தாபனமானது ('எஸ்பியோனாஜ்') உளவு அறிதல், ('கௌன்ரர். எஸ்பியொனாஜ்') உளவுபார்த்தற்கு எதிரான உளவறிதல், இன்னும் மறைமுகமான எண்ணிறந்த நடவடிக்கைகள் ஆகியவற்றில் ஈடுபட்டு வருகிறது. (அடுத்த, இஸ்ரேலின் வேவு பார்த்தல், உளவறிதல் தாபனங்கள் பற்றிப் பார்ப்போம்)

(தொடரும்)

நேற்று வெளியான கட்டுரையின் தொடர்ச்சி

★ பாகிஸ்தான் இராணுவ ஆட்சியில் வழமைக்கு மாருன நிலை:

# தேசிய சட்டசபை, செனட்டை ஏககாலத்தில் கூட்ட ஜனதிபதி அழைப்பு'

(கராச்சி)

பாகிஸ்தானில் இவ்வருட இறுதிக்குள் இராணுவச் சட்டம் அகற்றப்பட்டுவிடும் என்று ஜனதிபதி ஜெனரல் ஷியாவுல்ஹக் அறிவித்துள்ள அதேவேளை தேசிய சட்டசபையும், செனட் சபையும் இன்று ஜனதிபதியால் அழைக்கப்பட்டுள்ளதான அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இவ்விதம் இருசபைகளும் ஏககாலத்தில் கூட்டப்படுவது வழமைக்கு மாருனதாகும்.

இவ்வாறு ஜனதிபதி இருசபைகளையும் கூட்டக் காரணம் என்ன என்பதை அவர் தெரிவிக்கவில்லை.

டிசம்பர் இறுதிக்குள் இராணுவச் சட்டம் அகறறப்பட்டுவிடும் என்று அவர் கூறியுள்ள போதிலும் திகதி ஒன்றைஅவர் குறிப்பிடவில்லை.

பாகிஸ்தான் ஸ்தாபகர் ஜின்னுவின் ஜனனதினமான இம்மாதம் இருபத்தைந்தாம் திகதி ஜனதிபதி முக்கிய அறிவிப்பு ஒன்றை விடுப்பார் என்றுஎதிர்பார்க்கப்படுகிறது.

எட்டு வருடகாலம் இங்கு இராணுவ ஆட்சி நடைபெற்றுவருகிறது.

இது இவ்வாறு இருக்க, ஜனநாயக மீட்பு இயக்கத்தினர் தம் பதினெரு கட்சிகளுடன் பேரணி ஒன்றை நடத்த முற்பட்டதையடுத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக இருபது தலைவர்கள் லாகூரில்உள்ள அவரவர் வீடுகளில் வைத்துப் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளதாக நேற்று அறிவிக்கப்பட்டது.

## ரூ. 7 கோடி ஒதுக்கீடு

(புதுடில்லி)

தென்மண்டல வளர்ச்சி நிதிக்கென மத்திய அரசு இவ்வருடம் ஏழு கோடி ரூபாவை ஒதுக்கியுள்ளதாக நேற்று அறிவிக்கப்பட்டது.

வடகொரியா வற்புறுத்து

## தென்கொரியாவில் அணு சாதனம் நீங்கவேண்டும்

(ஏடன்)

தென்கொரியா விலிருந்து அணுசக்தி சாதனங்களை அமெரிக்கா அகற்றிக்கொள்ளவேண்டும் என்று வடகொரியா கோரிக்கை விடுத்துள்ளது.

சமீபத்தில் ஜெனீவாவில் நடைபெற்றசோவியத்—அமெரிக்க உச்சி மாநாட்டுவேளை உருவான உடன்பாடு உருப்படியாகச் செயற்படுத்தப்படும் என்ற நம்பிக்கையையும் வடகொரியா வெளியிட்டுள்ளது.

## மக்கள் கண்ணில் நீர் வழிந்தால்: ராஜீவ் விளக்கம்

(புதுடில்லி)

''நாட்டில் ஒவ்வொருவருடைய கண்ணில் இருந்துவடியும் நீரும் துடைக்கப்பட சகல முயற்சிகளும் மேற்கொள்ளப்படும்'' என்று பாரதப் பிரதம மந்திரி திரு. ராஜீவ் காந்தி காங்கிரஸ் நூற்ருண்டையொட்டி இதழ் ஒன்றிற்கு அனுப்பி வைத்துள்ள செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

''குடும்பத்தில் குறைந்த பட்சம் ஒருவருக்காவது வேலை வாய்ப்புக் கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்'' என்றும் சொன்னுர் அவர்.

ஆயுதக் கட்டுப்பாடு மீறல்?

## அமெரிக்கக் குற்றச்சாட்டை சோவியத் நிராகரித்தது!

(மாஸ்கோ)

''அணுவாயுதக் கட்டுப்பாட்டுத்திட்டத்தை தான் மீறிவருவதாக அமெரிக்கா குற்றஞ்சாட்டுவது குறித்து சோவியத் யூனியன் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

''இது பொய்யான குற்றச்சாட்டு'' என்று சோவியத் யூனியன் தனது மறுப்பில்தெரிவித்துள்ளது.

அஸாம் புதிய முதல்வர் அறிவிப்பு

## சிறுபான்மையோர்க்கு மதிப்பு, லஞ்சம் ஊழல் ஒழிப்பு, சீரானநிலையான நிர்வாகம்

(கொஹாட்டி)

அஸாம் முதலமைச்சராக மக்கள் முன்னணியைச் சேர்ந்த தலைவர் திரு. பிரபுல்லா குமார் மொகாந்தா பதவியேற்கவுள்ளார்.

சட்டசபை உறுப்பினர்களின் தலைவராக இவர் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இதன் பின் அவர் ஆளுநர் திரு. நாராயணசிங்கைச் சந்தித்து தன் கட்சியின் ஸ்திரம் குறித்து உத்தியோகபூர்வமாக எடுத்துரைத்தார்.

செய்தியாளர் மத்தியில் திரு. மொகந்தா பின்னர் பேசுகையில், ''தேர்தல் நேரம் அளிக்கப்பட்ட சகல வாக்குறுதிகளும் நிறைவேற்றப்படும்'' என்ருர். ''சகல இனமக்களும் ஒற்றுமையாக வாழ வழி வகுக்கப்படும் என்று சொன்ன அவர் அஸாம் உடன்படிக்கை செயற்படுத்தப்படும் என்றும் சகல நிலைகளிலும் லஞ்சம் ஊழல் அகற்றப்படும் என்றும் சிறுபான்மையினரும் பாரதக் குடிமக்களாகவே கருதப்படுவர் என்றும் அவர்கள் அச்சம் அடையத் தேவையில்லை என்றும் கூறினர்.

இரு சுயேச்சைகளும் அஸாம் மக்கள் முன்னணிக்குத் தம் ஆதரவை அளித்துள்ளதால் அதன் பலம் இப்போது அறுபத்து ஆருக உயர்ந்துள்ளது.

திருமதி வின்னிமண்டேலா குற்றச்சாட்டு

## தென்னுபிரிக்க அரசு, நல்ல வாய்ப்பை இழந்து விட்டது

(ஜொஹனஸ்பேக்)

''தென்னுபிரிக்க அரசாங்கம் அமைதித் தீர்வுக்கான வாய்ப்புக்களை நழுவவிட்டு விட்டது.'' என்று சிறைவைக்கப்பட்டுள்ள தேசியவாதத் தலைவர் நெல்ஸன் மண்டேலாவின் மனைவி திருமதி வின்னிமண்டேலா குற்றஞ்சாட்டியுள்ளார்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் இவர் பொலிஸாரால் வசிப்பிடத்தைவிட்டு அகற்றப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

## பாரதத்திறகு பதினேழு தங்கப்பதக்கம்

(டாக்கா)

டாக்காவில் நடைபெறும் இரண்டாவது தெற்காசிய விளையாட்டுவிழாவில் பாரதம் பதினேழு தங்கப் பதக்கங்களைப் பெற்றுள்ளது.

## இந்திரா கண்காட்சி

(கெய்ரோ)

இந்திராகாந்தி அம்மையாரின் வாழ்க்கையைச் சித்தரிக்கும் புகைப்படக் கண்காட்சி ஒன்று கெய்ரோவில் தற்போது நடைபெறுகிறது.


## பிரதேச அபிவிருத்தி அமைச்சு

1981, 1982, 1983, 1984, 1985 ஆம் ஆண்டுகளில் இலங்கையில் வெளியான

## தமிழ் நூல்களுக்கு பரிசளித்தல்

1981, 1982, 1983, 1984, 1985 ஆம் ஆண்டுகளில் இலங்கையில் வெளியான தமிழ்நூல்களிற் சிறந்தனவத்றைத் தேர்ந்தெடுத்துப் பரிசளிக்கப் பிரதேச அபிவிருத்தி அமைச்சு முடிவு செய்துள்ளது.

கீழ்குறித்த வகை நூல்களுக்குப் பரிசில்கள் வழங்கலாகும்.

1. நெடுங்கதை (நாவல்) 2. சிறுகதை
3. நாடகம் 4. மரபுக்கவிதை
5. புதுக்கவிதை 6. சிறுவர் கவிதை, குழந்தைக் கவிதை
7. இலக்கிய ஆய்வு 8. இந்து, சைவ இலககியம்
9. கிறிஸ்தவ இலக்கியம் 10. இஸ்லாமிய இலக்கியம்
11. பௌத்த இலக்கியம் 12. விஞ்ஞானம், அறிவியல்
13. சமூகவியல், மானுடவியல் ஆய்வு.

நூல்களை எழுதியவர் இலங்கையர் ஆவதோடு நூல்களும் இலங்கையில் வெளியிட்டனவாக இருத்தல் வேண்டும்.

பிரதேச அபிவிருத்தி அமைச்சுச் செயலாளர் நியமிக்கும் மதிப்பீட்டாளரின் மதிப்பீடுகளுக்கும், எடுத்துரைகளுக்கும் அமைய பரிசில்கள் வழங்கலாகும். பிரதேச அபிவிருத்தி அமைச்சுச் செயலாளரின் முடிவே இறுதியானது.

மேற்குறித்த இவ்வாண்டுகளில் இலங்கையில் வெளியிட்ட தமிழ் நூல்களை எழுதிய இலங்கையரான நூலாசிரியர்களோ, வெளியீட்டாளர்களோ அவற்றை நூலுக்கு மூன்று படியாகக் கீழ்க்காணும் முகவரிக்குத் தபாலிலோ, நேரடியாகவோ 28-02-1986 க்கு முன்பு கிடைக்கக் கூடியதாக அனுப்பும்படி இத்தால் வேண்டப்படுகின்றனர்.

முகவரி: பிரதேச அபிவிருத்தி அமைச்சுச் செயலாளர்
பிரதேச அபிவிருத்தி அமைச்சு,
244, காலி வீதி,
கொழும்பு- 04.

நூல்களை அனுப்பும் உறையின் இடதுபுற மூலையில் ''பிரதேச அபிவிருத்தி அமைச்சுத் தமிழ் நூற் பரிசுத் தேர்வு'' என்ற வாசகம் பொறித்திருத்தல் வேண்டும்.

ம. இராமலிங்கம்,
பிரதேச அபிவிருத்தி அமைச்சுச் செயலாளர்.

பிரதேச அபிவிருத்தி அமைச்சு,
244, காலி வீதி,
கொழும்பு - 04.
1985 டிசெம்பர் 08ம் நாள். (பி 954)


மிகப் பழைமை வாய்ந்த

## ★ நீர்த்தொட்டி ★

(புதுடில்லி)

அலகாபாத்துக்கு முப்பத்து ஐந்து கிலோமீற்றர் தொலைவில் மிகப் பழைமையான நீர்த்தொட்டி ஒன்றை அகழ்ந்து கண்டுபிடித்துள்ளதாக நேற்று அறிவிககப்பட்டது. இருநூற்றைம்பது மீற்றர் நீளமுள்ள இந்த நீர்த்தொட்டி கி. பி. முதலாவது அல்லது இரண்டாவது நூற்ருண்டைச் சோந்தது என்று தொல்பொருள் இலாகா முன்னுள் இயக்குநர் திரு. பி. பி லால் கூறியுள்ளார். இராமாயண கால அகழ்வுத் திட்டப்பணி அவரது மேற்பார்வையில் நடைபெறுகிறது.

2 . 12 . 85 செவ்வாய்க்கிழமை

# ஈழமுரசு

| ஆஸ்பத்திரி சுப்பிரின்டன் அறிவிப்பு |

## ஈரான்—ஈராக கொழும்பில் மோதல்! காருக்குச் சூடு!!

(கொழும்பு)

கொழும்பு ஈரான் தூதரக அதிகாரிகள் சென்ற காரொன்றுக்கு ஈராக் தூதரகம் முன்னுல் வைத்து துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொள்ளப்பட்ட சம்பவம் நேற்றுமுன்தினமிரவு 10-30 மணியளவில் நடைபெற்றது. பார்ன்ஸ் பிளேஸிலுள்ள ஈராக் தூதரகம் முன்னுல் இது இடம்பெற்றதாக வெளிநாட்டமைச்சிடம் புகார் செய்யப்பட்டுள்ளது. சன்னங்கள் காரில் பாய்ந்து காருக்குச் சேதமேற்பட்டதாயினும், உள்ளேயிருந்த ஈரான் அதிகாரிகள் இருவரும் காயமின்றித் தப்பியுள்ளனர்.

# யாழ் ஆஸ்பத்திரி மோசமான நிலையிலுள்ளது; அரசு வழங்கும் உதவி எவ்வகையிலும் போதாது

"இன்றைக்கு இருபது வருடங்களுக்கு முன்னர் இலங்கையிலேயே சிறந்த வைத்தியசாலையாக யாழ். அரசினர் வைத்தியசாலை திகழ்ந்தது. ஆனுல் இன்று அதன் நிலை மிகவும் மனவருத்தத்திற்குரியது. இங்குள்ள கட்டிடங்கள் சில 100 வருடங்களுக்கு மேல் பழமை வாய்ந்தவை. இவற்றில் சில பாவனைக்கே உதவாத நிலையிலுள்ளன. சில வருடங்களின் முன் அதி தீவிர சிகிச்சைப் பிரிவு ஒன்று இங்கு அமைக்கப்பட்டது. அதற்கு வேண்டிய நவீன உபகரணங்கள் பல ஸ்தாபனங்களின் உதவியுடன் பெறப்பட்டன. ஆனுல் அந்த நவீன உபகரணங்களை கொண்டு நோயாளிகளுக்கு சிகிச்சை அளித்தாலும் அவர்களை நல்ல முறையில் பேணக்கூடிய தளபாட வசதிகள் இங்கு கிடையாது.

நேற்று யாழ். வைத்தியசாலையில் நடைபெற்ற வைத்தியசாலை நலன்புரிச்சங்க கூட்டத்தில் உரையாற்றிய யாழ். சுகாதார வைத்திய அத்தியட்சகர் டாக்டர் எஸ். நச்சினார்க்கினியர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில் "இவ் வைத்தியசாலை இன்று மிகவும் மோசமான நிலையை எதிர் நோக்கியுள்ளது. இவ்வைத்தியசாலையை நல்லமுறையில் பேண அரசினுல் வழங்கப்படும் உதவிகள் போதா. இதனை நிவர்த்திசெய்ய தனியார் ஸ்தாபனங்களும், பொது மக்களும் முன்வரவேண்டும். தற்போது இவ்வைத்தியசாலையில் சுத்தமான விடுதி வசதிகள், குடிநீர் விநியோக வசதிகள், மலசலகூட வசதிகள், வடிகாலமைப்பு வசதிகள், கட்டிட திருத்த வசதிகள், இரத்த வங்கி, அவசர தேவைகளுக்கான உணவு வசதிகள் என்பவற்றை மேலும் விருத்தி செய்ய பொது ஸ்தாபனங்களின் உதவி தேவைப்படுகின்றது" என்று குறிப்பிட்டார்.

டாக்டர் சிவராசா தனதுரையில் வெளிநாடுகளில் உள்ள நோயாளர் நலன்புரிச் சங்கங்கள் நோயாளர்களின் பல்வேறுபட்ட தேவைகளையும் கவனிப்பதற்காக வைத்தியசாலைகளில் தங்களின் பிரதிநிதிகளை வைத்திருப்பதுண்டு. அதே நடைமுறையை இங்கும் அமுல்படுத்த வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்.

இரத்ததானம் சம்பந்தமாக நோயாளர்களுக்கு வேண்டிய தகவல்களையும், உதவிகளையும் வழங்குவதற்கென மேற்படி வைத்தியசாலையில் ஒரு உதவியாளரை கடமையிலீடுபடுத்தும் பொறுப்பை நல்லூர் சங்கிலியன் புனர் வாழ்வுககழகம் ஏற்றுக் கொண்டது. வேறு பலரும் உரையாற்றினர்.

## விவசாய ஆசிரியர் பயிற்சி நியமனக் கடிதம் தாமதம்

(யாழ்ப்பாணம்)

கலைப் பட்டதாரி, சங்கீத, நடன ஆசிரிய நியமனம் சம்பந்தமான முன் பயிற்சித்திட்ட அறிவித்தல்கள் கிடைத்தும் தங்கள் விவசாய டிப்ளோமா ஆசிரிய பயிற்சித்திட்ட அறிவித்தல் எதுவும் கிடைக்காததையிட்டு நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றிய விவசாய டிப்ளோமா ஆசிரியர்கள் முறையிட்டுள்ளனர்.

தமது அங்கலாய்ப்பை இவர்கள் வட மாநிலக் கல்விச் சேவைப் பணிப்பாளர் ஊடாக கல்விச் சேவைகள் ஆணைக் குழுவிற்குக் கடிதம் மூலம் தெரிவித்துள்ளனர்.

இது விடயத்தில் உடன் கவனமெடுக்குமாறு இவர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர்.

## பென்ஷன்காரர் வாரன்ட்; "இன்று போய்; நாளை வா!"

யாழ். மாவட்டத்தில் அரசாங்க சேவையில் இருந்து ஓய்வு பெற்றவர்கள் தமக்குரிய ரயில்வே வாரன்டுகளைப் பெறுவதற்கு யாழ். கச்சேரி பென்சன் பகுதிக்கு தினமும் சென்ற வண்ணம் இருக்கிறார்கள். ஆனுல் அங்கு "வாரன்ட் எழுதுவதற்கு ஆள் இல்லை; நாளை வரவும்" என்ற பல்லவி நீடிப்பதுடன் தங்களால் ஒப்படைக்கப்பட்ட வாரன்டுக்கான விண்ணப்பங்களும் தேங்குவதாக பாதிக்கப்பட்டவர்கள் புகாரிட்டுள்ளனர்.

ஓய்வு பெற்றோரில் சிலர் தள்ளாத வயதிலும் குடாநாட்டின் தூர இடங்களில் இருந்து இங்கு வந்து அலைகிறார்கள். தற்போதைய நிலையில் பல கஷ்டங்களை நாளாந்தம் அனுபவித்து வருகிறார்கள்.

இதுபற்றி பாதிப்புற்ற ஒருவர் குறிப்பிடுகையில், வடக்குக்கான ரயில் சேவை தற்போது வாரத்தில் நான்கு நாட்களே நடைபெறுவதால் நாங்கள் முன் கூட்டியே பெற்றுக்கு இந்த வாரண்ட் நேரத்துக்கு கிடைப்பதில்லை எல்லாம் வருடத்துக்கு தயக்கு வழங்கப்படும் ஒரு சோடி வாரண்டையும் உரிய நேரத்தில் பெற்றுக் கொள்ள முடியவில்லையே எனவும் கவலை தெரிவித்தார்.

## அரியாலை முகாமை தாக்க ராணுவம் எடுத்த முயற்சி புலிகளால் முறியடிக்கப்பட்டது!

அரியாலையிலுள்ள தமது முகாமை வெள்ளிக்கிழமை நவீன யுக்தி முறையில் ஹெலிகப்டர் சகிதம் இராணுவத்தினர் தாக்க முயன்றதாகவும், இதற்கெதிராகத் தம்மால் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களுக்கு தாக்குப் பிடிக்க முடியாமல இராணுவத்தினர் ஓடித்தப்பிவிட்டதாகவும் தமிழீழ விடுதலைப் புலிகள் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிலைமைகளை நன்குணர்ந்து தாம் இராணுவத்திற்கெதிரான தாக்குதல்களை தொடர்ச்சியாக மேற்கொண்டதாகவும் ஹெலிகப்டர் மீதும் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டதாகவும் இதனுல் இராணுவத்தினர் தரப்பில் பலத்த உயர்ச்சேதமேற்பட்டதாகவும் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இராணுவத்தினருடன்நேருக்கு நேர் நின்று போராடிய காத்திக (உதயன் - கோணடாவில்) களப் பலியானதாகவும் இவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### ஸ்ரீ நினைவு நாள்

யாழ் பல்கலைக்கழக மாணவர் அவையின் முன்னுள் தலைவர் அமரர் பொ. ஸ்ரீஸ்கந்தராஜா மறைந்து இன்றுடன் ஒரு வருடம் பூர்த்தியாகிறது.

பல்கலைக்கழக மாணவர்களுக்காக மட்டுமல்லாது முழுத் தமிழினத்தின் விடிவுக்காகவும் இறுதிவரை போராடித் தனது உயிரை அர்ப்பணித்த இவரின் நினைவை பல்கலைக்கழக மாணவர்கள் இன்று ஆழ்ந்த கவலையுடன் நினைவு கூருகின்றார்கள்.

### சங்கீத, நடன ஆசிரியர்கள் கவனத்துக்கு

(யாழ்ப்பாணம்)

சங்கீத, நடன ஆசிரியர்களாகக் கல்விச் சேவை குழுவினுல் தெரிவுசெய்யப்பட்டவர்கள் இம்மாதம் 27-ம் திகதி வெள்ளிக்கிழமை கல்விஅமைச்சிலுள்ள கல்விச் சேவைக் குழு அலுவலகத்தில் அவர்களது நியமனக் கடிதங்களைப் பெற்றுக் கொண்டு பயிற்சிக்குச் செல்லுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

### என்னைப்...

கம் குறிப்பிட்டுச் சொன்னுர்.

டாக்டர் பாலசிங்கத்தைக் கொலை செய்வதற்கு இலங்கை அரசின் மொசாட்டுடன் இணைந்து இலங்கை உளவுப்படையினர் மேற்கொண்ட முயற்சியே இச்சம்பவம் என்று விடுதலைப் புலிகள், ரெலோ. ஈரோஸ், ஈ.பி.ஆர்.எல்.எவ் ஆகிய இயக்கங்கள் சென்னையில் தெரிவித்துள்ளன.

### தமிழர் மீது...

ணுவத்தின் போர் நிறுத்த அத்து மீறல், ஹெலிகப்டர் தாக்குதல் என்பன குறித்து விபரங்களை முன்னணி மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

### தமிழ்பகுதி....

தாக்கியதால் அவர்கள் அகதிகளாகத் தமிழநாட்டிற்கு ஓடிவரும் நிலையில் இருக்கிறார்கள் எனவும் இத்தந்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்திலிருந்து தமிழர்களை வடமாகாணத்திற்குத் துரத்திய பின் அவர்களை அடியோடு ஒழிப்பதே அரசின் திட்டம் எனவும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

### வடகிழக்கு ...

1ம் பக்கத் தொடர்

நிதித்துவப்படுத்தவில்லை எனவும் குறிப்பிட்ட அமைச்சர், ஈரோஸ் இயக்கத்தைச் சேர்ந்த பாலகுமார் வடக்கு, கிழக்கு மட்டுமல்லாமல் பதுளையையும் சேர்ந்த பகுதியே ஈழம் என்று பேட்டியொன்றின் போது தெரிவித்திருந்ததாகவும் கூறினுர்.

திட்ட அமுலாக்கல் அமைச்சின் செயலாளர் கலாநிதி விக்கிரம வீரசூரிய இங்கு ஆரம்ப உரையாற்றுகையில், இலங்கையின் உண்மை நிலையை தெளிவுபடுத்தவே இவ்வாறன மகாநாடுகள் நடத்தப்படுவதாகவும் கிறிஸ்மஸின் பின்னர் மற்றொரு மகாநாடு இது சம்பந்தமாக நடத்தப்படும் எனவும் கூறினுர்.

### படையினரால்....

பிற்பகல் இரண்டு கவச வண்டிகளிலும், மினிபஸ்ஸிலுமாக புறப்பட்டு துறைமுகப் பகுதிக்குச் சென்றதால் அப்பகுதியில் பெரும் பதற்றம் ஏற்பட்டது.

காரைநகர் கிழக்கு வீதி ஓரத்திலுள்ள வீடுகளிலிருந்து மக்கள் வெளியேறினுர்கள். களபூமி, வலந்தலை, ஆகிய பகுதிகள் வெறிச்சோடின. கடைகளும் இழுத்து மூடப்பட்டன. வைத்தியசாலையிலிருந்த மக்களும் பதற்றத்துடன் விரைந்து வீடு திரும்பினர்.

### வவுனியாவில்...

பணத்தைப் பறிக்க முயன்ற சமயம் கூடிநின்ற பொதுமக்களும் சேர்ந்து எதிர்த்தபோது பொலிஸாரும் விரைந்து கமநல சேவை நிலையத்திலிருந்த பைசிக்கிள்களை எடுத்துக் கொண்டு இளைஞர்களை அந்த நபர்கள் தப்பியோடி விட்டதாகக் கூறப்படுகிறது.

### அடகு வைத்தோர்...

ணர்.

பேராசிரியர் கா. சிவத்தம்பி தெரிவித்த கருத்துப்படி நகைகளின் விதியோகத்தை பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகள் அனுமதியளித்திருப்பதாகவும், வங்கி நிர்வாகமே இதற்கு தயக்கம் காட்டி வருவதாகவும் தெரிய வருகிறது எனவும் அடகு வைத்தோர் சங்கம் தெரிவித்துள்ளது.

### யாழ்தேவி...

'யாழ்தேவி' ரயில் சேவைகள் இன்று முதல் மீண்டும் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

செவ்வாய், வியாழன், சனி ஆகிய தினங்களில் மட்டுமே இச்சேவை இடம்பெறும். இத்தினங்களில் காலை 5.5மணிக்கு மருதானையிலிருந்து புறப்படும் யாழ்தேவி 12.20க்கு யாழ்ப்பாணத்தை வந்தடையும், மீண்டும் நண்பகல் 1-30க்குப் புறப்பட்டு இரவு 8-40க்கு மீண்டும் மருதானை சென்றடையும்.

## மரண அறிவித்தல்

### திருமதி நாகபூஷணம் தியாகராஜா

செட்டித் தெரு பருத்தித்துறையைச் சேர்ந்த காலஞ்சென்ற மலாயன் பென்ஷனியர் தியாகராஜாவின் அன்பு மனைவி நாகபூஷணம் நேற்று 23-12-85 திங்கட்கிழமை காலமானுர். அன்னுர் இராஜேஸ்வரி (மலேசியா) நாகேஸ்வரி, மகேஸ்வரி, திருநாகரன் (பெல்ஜியம்) லோகேஸ்வரன் (அமெரிக்கா) ஈஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆறுமுகம் (மலேசியா) இராசதுரை (இளைப்பாறிய புகையிரத சாரதி) பேள் (பெல்ஜியம்) சிவானந்தன் (உள் நாட்டு இறைவரித் திணைக்களம், மட்டக்களப்பு) சாந்தாவதி ஆகியோரின் அன்பு மாமியும் இளைப்பாறிய சுங்கத் திணைக்கள ஊழியர் வடிவேலுவின் சகோதரியும், நவமாலா (மலேசியா) மகேந்திரலிங்கம் (அமெரிக்கா) நகுலராசா (சவுதி) நாதன் (சவுதி) நடேசன (மே. ஜேர்மனி) நிமலன். தியாகேசன், தயாளன், ஞானன், சுகன்யா, நளினி, தர்ஷினி, கார்த்திக் ஆகியோரின் பாட்டியுமாவார். தகனக் கிரியை பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

R15217

"ஈழமுரசு" சாயிபாபா அட்வர்டைசிங் அஸோஸியேற்ஸ் ஸ்தாபனத்தாரால் 37, கண்டி வீதி யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகப் பகுதியில் 24-12-85 செவ்வாய்க்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது. தொலைபேசி: 23336